Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Tirupattur District

| | |
|---|---|
| Deposition of witness for | |
| Name | Saroja |
| Father's Name | Appadurai |
| Village | Thangapuram |
| Taluk | Tirupattur |
| Caste | MBC |
| Calling | - |
| Religion | Hindu |
| Age | 66 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.03.2025

MCOP.137/2023 PW1 Name:**சரோஜா**

**<u>முதல் விசாரணை</u>**

நான் மனுதாரர். என் முதல் விசாரணை சாட்சியத்தினை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதனை என் முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். மனுவில் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1 ஆகவும், சட்டப்பிரிவு மாற்று அறிக்கை ம.சா.ஆ.2 ஆகவும், உடற்கூராய்வு சான்று நகல் ம.சா.ஆ.3 ஆகவும், பதிவு சான்று நகல் ம.சா.ஆ.4 ஆகவும், காப்பீட்டு சான்று நகல் ம.சா.ஆ.5 ஆகவும், ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.6 ஆகவும், ஆதார் அடையாள அட்டை நகல்கள் ( 2 எண்ணிக்கைகள்) ம.சா.ஆ.7 ஆகவும், வாரிசு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.8 ஆகவும், குறியீடு செய்யுமாறு வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து சமயத்தில் விபத்திற்குள்ளான வாகனம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யபட்டுள்ளதால் நாங்கள் இழப்பீட்டினை 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்திடம் மட்டும் கேட்கமுடியும் என்று சொன்னால் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து தொடர்பான முதல் தகவல் அறிக்கை நான்தான் கொடுத்துள்ளேன். எனக்கு 3 ஆண்பிள்ளைகள், 1 பெண்பிள்ளை உள்ளார்கள் எல்லோருக்கும் திருமணம் ஆகிவிட்டது. விபத்தில் இறந்துள்ள என் மகன் சிவாவிற்கு விபத்து சமயத்தில் 40 வயது என்றால் சரிதான். அவர் பஜாஜ் பிலாட்டினா வண்டியை ஓட்டிசென்றார். திருப்பத்துர் வாணியம்பாடி மெயின் ரோட்டில் பொன்னேரி அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில் விபத்து நடந்தது. நிறுத்தபட்டிருந்த வேனிற்கு பின்னால் என் மகனின் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய மகனிற்கு எதிராக ஜோலார்பேட்டை காவல்நிலையத்தில் குற்றவழக்கு பதிவு செய்துள்ளார்கள். என் மகனுக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் அதை தாக்கல் செய்யவில்லை. என் மகனின் தலையில் அடிப்பட்டு தான் இறந்தார். அவர் தலைகவசம் அணிந்திருக்கவில்லை என்றால் சரியல்ல. என் மகனின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டுள்ளதால் நான் மனுவில் எந்த இழப்பீடும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் முன் வைத்துள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. என் மகனின் தொழில் வருமானத்தை காட்டகூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. என் கணவர் என் மகன் இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். என் மகனுக்கு குழந்தைகள் இல்லை. மனு தள்ளுபடி

செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வேன் ஓட்டுநருக்கு முறையான காப்பீடு உரிமம் இல்லை என்பதால் காப்பீட்டு பாலிசி விதிமுறை மீறால் ஏற்பட்டுள்ளதால் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. வேனின் பின்புறத்தில்தான் சேதாரம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இழப்பீட்டு தொகை அதிகமானது என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 19/03/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.03.19 13:11:35 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.